முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1661

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.04.2024,** செவ்வாய்கிழமை

1. கருணைக்கடலே அரங்கா
   கலியுகத்தை மீட்க வந்த தேசிகா
   ஆறுமுகன் என் அவதார அரங்கா
   அண்ணலே தவராஜனே ஞான தேசிகா
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
   (குரோதி வருடம் சித்திரை மாதம் 03 ம் நாள், 16.04.2024, செவ்வாய்கிழமை)
   ஆசிதந்து அரங்கன் உன்னுள் யான்
   ஆற்றலாக நிரம்பி இருக்கின்றேன்
3. வாசிவென்ற ஞானிகளை எல்லாம் உன்னோடு
   வல்லமைபட ஒன்றிணைத்து சேவையாற்றுகின்றேன்
   ஆகவே அரங்கன் நீயே கலியின் சிறந்த ஞானி
   ஆற்றல்மிக்க அரங்கன் உன் தர்மமே
4. ஜெகத்தை மாற்றும் மாதர்மமாகும்
   சித்திமிகு உன் உபதேசங்கள் அத்துனையும்
   கலியுகத்தை மாற்றும் வேதமாகும்
   இத்தரையில் உலகோர் ஒன்றிணைந்து
5. உத்தம ஞானி உன்வழி உயர்ஞானம் பயின்று
   உலகில் அரங்கன் சன்மார்க்கத்தை தழுவ
   தழுவவே இந்த கலியுகத்தில் சடுதி
   தவபலமாய் மாறி உலகோர்க்கு மாற்றம்
6. வழுவாது ஞான சித்தியாகவும்
   வல்லமைகொண்ட அரங்கன் ஆசியோடு ஞானிகளாகவும்
   ஆகவே உலகோர் மாற்றம் கண்டு
   அற்புதத்தை கலியில் நடத்தக்கூடும்

7. ஜெகமக்கள் அன்னதனால் ஒன்றிணைந்து
சித்திமிகு அரங்கன் குடிலுக்கு
வரம் கேட்டு வர
இந்த உலகிலே வல்லமைபட

8. உலகமாற்றம் அரங்கனால் சித்தியாகவும்
ஆறுமுக அரங்கன் அவதார நோக்கமாகவும்
சரவணப் பெருமான் யானும்
சடுதி நிகழ்த்தி அற்புதம் படைப்பேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–